**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM**

STC.No. 702/2022 Date: 06.03.2026

சரவணக்குமார்–எ.சா.1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

9. நான் புகார்தாரருக்கு அனுப்பிய பதிலறிவிப்பில் புகார்தாரருக்கு ரூ.30,000/– மற்றும் வட்டி ரூ.1500/– ஆகியவற்றை எந்த ஊரில், எந்த இடத்தில் கொடுத்ததாகக் கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல் வட்டி எந்த ஊரில், எந்த இடத்தில் கொடுத்ததாகக் கூறவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் ரூ.30,000/– தொகை கடன் வாங்காததால்தான் மேற்படி விபரங்கள் குறித்து எனது பதிலறிவிப்பில் கூறவில்லை என்றால் சரியல்ல.

10. இவ்வழக்குத் தாக்கல் செய்த பின்பு காசோலையை தவறாகப் பயன்படுத்தியதாக புகார்தாரர் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் புகார்தாரரிடம் ரூ.5,00,000/– கடன் வாங்கிக்கொண்டு அக்கடனைத் தீர்ப்பதற்காக வழக்குக் காசோலையை புகார்தாரருக்கு கொடுத்தால்தான் புகார்தாரர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

11. ஸ்ரீ விஷ்ணு கார்மெண்ட்ஸை நான் எங்கு நடத்தி வந்தேன் என்றால் புஞ்சை புளியம்பட்டி கோயில்புதூரில் நடத்தி வந்தேன். ஸ்ரீ விஷ்ணு கார்மெண்ட்ஸ்க்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பிய சம்மனையும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திலிருந்து ஸ்ரீ விஷ்ணு கார்மெண்ட்ஸ்க்கு அனுப்பிய சம்மனைப் பெற்றுக்கொண்டதால் மேற்படி நிறுவனத்தை அந்த சமயத்தில் நடத்தி வந்ததால்ததான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

12. நான் புகார்தாரரிடம் ரூ.5,00,000/- கடன் வாங்கிவிட்டு அதற்கு மோசடியாக வழக்குக் காசோலையை கொடுத்துள்ளேன் என்றாலும், இவ்வழக்குப் பிரகாரம் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.